**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No. 294/2025** |
| Prosecution witness | : | P.W. 1 |
| List of witness | : | L.W.1 |
| Name | : | கிருஷ்ணகுமார் |
| Father’s /Husband Name | : | ஜெயராமன் |
| Village | : | மூலங்குடி |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 33 |
| Occupation | : | பொறியாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 10th day of March 2026.
A1 to A3 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது குடவாசல் தாலுக்கா மூலங்குடி கிராமத்தில் வசித்து வந்து பொறியாளராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 2023 ம் ஆண்டு ஜீலை மாதம் தேதி சரியாக நினைவில் இல்லை இரவு 08.30 மணியளவில் நான் எனது வீட்டிலிருந்தபோது கூட்டமாக சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள் நான் என்னவென்று பார்க்கச்சென்றேன். கூட்டத்தில் யாரோ மூவர் என்னை அடிக்க வந்தார்கள். அந்த கூட்டத்தில் எனது வீட்டின் நிலைக்கண்ணாடி மீது கல்லால் அடித்தார்கள். அந்த நிலைக்கண்ணாடி உடைந்துவிட்டது. அதன் மதிப்பு சுமார் ரூ.600/- இருக்கும். கூட்டத்தில் ஆஜர் எதிரிகளும் இருந்ததால் சந்தேகத்தின் பேரில் அவர்கள் மீது குடவாசல் போலீசாரிடம் புகார் கொடுத்தேன். நான் மேற்சொன்ன சங்கதிகளை தான் போலீசாரிடம் கூறினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பு சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 பிரிவின் கீழ் அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் வழக்கு கோப்பின் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அரசு**

**தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நானும் எதிரிகளும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் நாங்கள் சமாதனம் செய்துகொண்டோம் என்றால் சரிதான்.

கடந்த 19.07.2023 ம் தேதி இரவு 09.00 மணிக்கு ஆஜர் எதிரிகள் எனது வீட்டு வாசலில் வந்து என்னை குச்சிக்காரி மவனே தேவடியா மவனே நீ என்னடா செந்திலுக்கு சப்போட்டா வருவியா என்று திட்டிக்கொண்டு என் வீட்டு மீது கல்லால் அடித்தார்கள் என்றும் அதில் எங்கள் வீட்டு நிலைக்கண்ணாடி உடைந்து விட்டது என்றும் அதன் மதிப்பு ரூ. 200/- இருக்கும் என்றும் நான் ஒன்றும் சொல்லாமல் வீட்டுக்குள்ளே சென்றேன் என்றும், அப்போது 2ம் எதிரி எங்க அப்பாகிட்ட வச்சிகிட்டா உன்னை போட்டு தள்ளிவிடுவேன் என்று மிரட்டி விட்டு சென்றார்கள் என்றும் புகார் வாக்குமூலத்திலும் போலீசார் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் செய்து கொண்டதால் எதிரிக்கு ஆதரவாக உண்மை சம்பவத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

எதிரிகளுடன் நான் சமாதனம் செய்து கொண்டேன் என்றால் சரிதான். எதிரிகள் என்னை மிரட்டியோ வற்புறுத்தியோ சமாதானம் ஆக சொல்லி சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான்.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.10 12:41:14 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.